கள்ளிக்குடி அருகே

கல் குவாரிகளை மூடக்கோரி கிராம மக்கள் போராட்டம்

▶ கள்ளிக்குடி அருகே கல் குவாரிகளை மூடக்கோரி, 5 கிராமங்களில் வசிக்கும் பொது மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருமங்கலம், நவ. 24: கள்ளிக்குடி அருகே கல்லணை கிராமத்தினை சுற்றியுள்ள கல் குவாரிகளை மூடக் கோரி, 5 கிராம மக்கள் நேற்று கோயில் அருகே திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கள்ளிக்குடி ஒன்றியத் திற்குட்பட்ட கல்லணை, புதூர், சின்ன உலகாணி, அச்சங்குளம், நெடுங்குளம் உள்ளிட்ட கிராமங்களை சுற்றி கல் குவாரிகள் அதிக எண்ணிக்கையில் இயங்கி வருகின்றன. குவாரிகளில் வெடி வெடிப்பதால் தங்களது வீடுகளில் விரிசல் ஏற்படுவதாகவும், கற்களை ஏற்றி வரும் கனரக வாகனங்களால் தூசி எழும்பி சுவாச கோளாறுகள், தொற்றுநோய் பாதிப்பு ஏற்படுவதாகவும், குவாரிகளால் நிலத்தடி நீர்மட்டம் பாதிக்கப்பட்டு வெகுவாக குறைந்து பாதிக்கப்படுவதாகவும் கிராமமக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். இந்தநிலையில் நேற்று கல்லணை கிராமத்தில் உள்ள விநாயகர் கோயில் அருகே திரண்ட கல்லணை, நெடுங்குளம், புதூர், சின்ன உலகாணி உள்ளிட்ட 5 கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள், குவாரிகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் கிராமத்தில் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது. ஆண்கள், பெண்கள், பள்ளி மாணவ, மாணவியர் என திரண்டு இந்த போராட்டத்தில், கருப்புக்கொடி ஏந்தி பங்கேற்றனர். இதுகுறித்து பொதுமக்கள் கூறுகையில், "குவாரிகளுக்கு செல்லும் வாகனங்களால் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு வருகிறது. இதனால் பள்ளிக்கு குழந்தைகளை அனுப்ப அச்சப்படும் நிலை உருவாகியுள்ளது. வெடிகள் வைக்கும் போது வீடுகள் அதிர்ந்து, சுவர்களில் விரிசல் உருவாகிறது. விவசாயம் பாதிக்கப்படுவதுடன், கால்நடைகளையும் வளர்க்க இயலவில்லை. மாவட்ட நிர்வாகம் இப்பிரச்னையில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்றனர். பொதுமக்களின் போராட்டத்தினை தொடர்ந்து, கூடக்கோவில் போலீசார் சம்பவ இடத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

திருமங்கலத்தில்

தேசிய நூலக வாரவிழா போட்டி

மாணவ, மாணவிகள் பங்கேற்பு

திருமங்கலம், நவ. 24: திருமங்கலம் கிளை நூலகத்தின் 58வது தேசிய நூலக வாரவிழாவில் நடைபெற்ற பேச்சுபோட்டி, கட்டுரைபோட்டி, கவிதை போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் பங்கு பெற்று மாணவ மாணவியர்கள் பரிசுகளை வென்றனர்.

திருமங்கலம் கிளை நூலகத்தின் வாசகர் வட்டம் மற்றும் சாரல் அரிமா சங்கம் சார்பில் 58வது தேசிய நூலக வாரவிழா மற்றும் பாராட்டு விழா நடைபெற்றது. விழாவிற்கு மாவட்டநூலக அலுவலர் பாலசரஸ்வதி தலைமை வகித்தார். நூலக வாசகர் வட்டத்தலைவர் சங்கரன், அரிமா சங்கத்தலைவர் விஜயபாண்டி முன்னிலை வகித்தனர். கிளை நூலகர் மலர்விழி வரவேற்றார். பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான பேச்சு, கட்டுரை, கவிதை உள்ளிட்ட போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் திருமங்கலம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகள் கிருத்திகா, ரதிஷ்கா, சையது அலிபாத்திமா, திருமங்கலம் அரசு பள்ளி மாணவர்கள் முத்துசரண், பாலபிரகாஷ், முகமது ஆசிக் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

▶ திருமங்கலத்தில் தேசிய நூலக வாரவிழா போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகள்.

இவர்களுக்கு அரிமா மாவட்ட இணை பொருளாளர் ராதாகிருஷ்ணன், முன்னாள் நூலக அலுவலர் இளங்கோ பரிசுகளை வழங்கி பாராட்டினர். இந்நிகழ்ச்சியில் நூலக வாசகர் வட்டத்துணைத்தலைவர்கள் பழனிராஜ், முருகன், துணை செயலாளர்கள் இருளப்பன், ஆதிமூலம், பார்த்தசாரதி, தமிழ்செல்வம், திருப்பதி, முரளிதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மதுரை மாவட்டத்தில் அதிக புரவலர்களை சேர்ந்தற்காக தமிழக அரசால் பாராட்டு பெற்ற ராயபாளையம் ஊர்ப்புற நூலகர் காதர் அமீதுவிற்கு பாராட்டு விழா நடைபெற்றது. வாசகர் வட்டப் பொருளாளர் சக்கையா நன்றி தெரிவித்தார்.

பேரையூர், சாப்டூரில் இன்று மின்தடை

பேரையூர் மற்றும் சாப்டூர் துணை மின் நிலையங்களில் இன்று (நவ.24) மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற இருக்கிறது. இதனால் இன்று காலை 9 மணிமுதல் மதியம் 2 மணிவரை பேரையூர் நகர், சின்னபூலாம்பட்டி, பெரியபூலாம்பட்டி,, பி.தொட்டியபட்டி, சாலிசந்தை, சிலைமலைப்பட்டி, கூவலாபுரம், ராவுத்தன்பட்டி, மேலப்பட்டி, ச.பாரபத்தி, தும்பநாயக்கன்பட்டி, சாப்டூர்நகர், பழையூர், செம்பட்டி, அத்திபட்டி, மைனூத்தாம்பட்டி, வண்டாரி, அணைக்கரைப்பட்டி, வண்டபுலி, வாழைத்தோப்பு மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் மின்தடை ஏற்படும் என, திருமங்கலம் மின்கோட்ட செயற்பொறியாளர் முத்தரசு தெரிவித்துள்ளார்.

பைக் தடுமாறியதில் ஒருவர் உயிரிழப்பு

மதுரை, கோ.புதூர் கற்பக விநாயகர் காலனியை சேர்ந்தவர் காதர் மைதீன். இவரது மகன் அபூபக்கர் சித்திக்(30). இவர் ஆத்திகுளம் கனகவேல் நகர் வழியாக பைக் ஓட்டி சென்றபோது, செப்டிக் டேங்க் கட்டுவதற்காக சாலையோரம் ஜல்லிக்கற்கள் குவிக்கப்பட்டு இருந்தது. இதில் சிக்கிய பைக் தடுமாறியதில் கீழே விழுந்த அவரது தலை மற்றும் நெஞ்சு, பகுதியில் பலமாக அடிபட்டது. இதில் மயங்கிய அவரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக மதுரை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். இதுகுறித்து போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

கார்த்திகை தீப கொப்பறை ஊர்வலம்

பேரையூரில் உள்ள பொய்கை மலை உச்சியில் மேலப்பரங்கிரி பூஜ்ஜிய ஸ்ரீ மல்லிகா அர்ஜுனா லிங்கசாமி கோயில் உள்ளது. இங்கு கார்த்திகை தீப திருவிழாவிற்கு மலையுச்சியில் மஹாதீபம் ஏற்றப்படும். இதற்காக கடந்தாண்டு திருவண்ணாமலையில் இருந்து மஹாதீப கொப்பறை கொண்டுவரப்பட்டது. இந்நிலையில் நேற்று இந்த ஆண்டுக்கான கார்த்திகை மகா தீப வழிபாட்டிற்காக பேரையூர் தாலுகா அலுவலகத்திலுள்ள வலம்புரி விநாயகர் கோயிலிருந்து சிறப்பு அலங்காரத்துடன் கொப்பறை ஊர்வலமாக பொய்கை மலையடிவாரத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்த கொப்பறை டிச.3ம் தேதி மலை உச்சிக்கு கொண்டு சென்று மஹாதீபம் ஏற்றப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

மது, புகையிலை விற்ற மூவர் கைது

கள்ளிக்குடி தாலுகா, வில்லூர் பகுதியில் உள்ள உவரி கிராமத்தில் குருசாமி (87) என்பவர் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனை செய்ய வீட்டில் பதுக்கி வைத்திருந்தார். அவரை வில்லூர் போலீசார் கைது செய்து புகையிலை பாக்கெட்டுகளை பறிமுதல் செய்தனர். பேரையூர் தாலுகா காரைக்கேணியில் சுப்புராஜ் (65) என்பவர் தடை செய்யப்பட்ட புகையிலைப் பாக்கெட்டுகள் விற்றதாக டி.கல்லுப்பட்டி போலீசாரால் கைது செய்யப்பட்டார். சாப்டூரில் மது பாட்டில்களை பதுக்கி வைத்து விற்பனை செய்த முருகன் (52) என்பவரை போலீசார் கைது செய்தனர். அவரிடமிருந்த மது பாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

டூவீலர் விபத்தில் வாலிபர் பலி

சோழவந்தான் பஸ் நிலையம் அருகே ஜூஸ் கடை நடத்தி வரும் கண்ணன் மகன் வீரமணிகண்டன் (25). திருமணமாகாத இவர், வாடிப்பட்டி தனியார் நிதி நிறுவன மேலாளராக இருந்து வந்தார். நேற்று முன் தினம் பணி முடிந்து டூவீலரில் வீடு திரும்பியபோது, பள்ளபட்டி - சோழவந்தான் சாலையில் கொல்லிக்கரை ரயில்வே கேட் அருகே சாலையோர பள்ளத்தில் நிலை தடுமாறி விழுந்து பலத்த காயமடைந்தார். அப்பகுதியில் இருந்தோரால் மீட்கப்பட்டு, மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட வீரமணிகண்டன் சிகிச்சை பலனின்றி நேற்று காலை பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து சோழவந்தான் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

அஞ்சல் ஊழியர்கள் வாக்கத்தான்

கடந்த 2014ம் ஆண்டு தொடங்கப்பட்ட தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ், திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்துதல், இதற்கான கூட்டு நடவடிக்கைகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்பு ஆகியவற்றின் மூலம் நாட்டின் தூய்மையை மேம்படுத்துவதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் பல்வேறு துறைகள் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்படி அஞ்சல் துறை சார்பாக மதுரையில் விழிப்புணர்வு வாக்கத்தான் நடைபெற்றது. மதுரை தல்லாகுளம் தலைமை அஞ்சலகம் முதல் காந்தி மியூசியம் வரை தலைமை அஞ்சலக ஊழியர்கள் சுமார் 100க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற இந்த வாக்கத்தானில் சுற்றுப்புறத் தூய்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மின் நுகர்வோர் குறைதீர் முகாம்

மதுரையில் நேற்று தெற்கு கோட்டத்திற்குட்பட்ட மின்நுகர்வோர்களிடம் இருந்து மனுக்கள் பெறப்பட்டன.

மதுரை சுப்பிரமணியபுரம் பவர்ஹவுஸ் ரோட்டில் அமைந்துள்ள தெற்கு கோட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தில் மின் நுகர்வோர் குறைதீர் கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு மதுரை பெருநகர் வட்டம், மேற்பார்வை பொறியாளர் ரெஜினா ராஜகுமாரி தலைமை வகித்தார். செயற்பொறியாளர் பாஸ்கர பாண்டி, உதவி செயற்பொறியாளர்கள், மின்பொறியாளர்கள், வருவாய் பிரிவு அலுவலர்கள் கலந்துகொண்டனர். கூட்டத்தில் வீட்டிற்கு மின் இணைப்பு பெற வேண்டியும், விவசாயத்திற்கு மின் இணைப்பு பெற வேண்டியும் மனுக்கள் பெறப்பட்டன. இதையடுத்து மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க மேற்பார்வை பொறியாளர் உத்தரவிட்டார்.

சோழவந்தான் அருகே

பழுதான தொட்டிப்பாலத்தில் பாசன நீர் வீணாகும் அவலம்

வேதனையில் விவசாயிகள்

சோழவந்தான், நவ. 24: சோழவந்தான் அருகே, பழுதடைந்த தொட்டிப் பாலத்தில், பாசன நீர் வீணாக வெளியேறுவதை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



சோழவந்தான் அருகே விக்கிரமங்கலம் கோவில்பட்டி முதல் மலையூர் வரை சுமார் ஒரு கிலோ மீட்டர் நீளத்திற்கு, விவசாயிகளின் பாசன நலனுக்காக தொட்டிப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. பேரணையிலிருந்து கால்வாயில் திறக்கப்படும் பாசன நீர், வி.கோவில்பட்டியில் இருந்து திருமங்கலம் கிளைக் கால்வாயாக பிரிந்து இந்த தொட்டிப் பாலம் வழியாக செல்கிறது. இதன் மூலம் முதலைக்குளம், செக்காணூரணி, மேல உரப்பனூர், விமான நிலையப் பகுதி வரை உள்ள 33 கன்மாய்களில் நீர் நிரப்பும். இதன் வாயிலாக சுமார் 15 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது.

முக்கியத்துவம் வாய்ந்த இக்கால்வாய் பராமரிப்பில்லாமல், பல இடங்களில் விரிசலடைந்து, நீர் வெளியேறி வீணாவதால், கண்மாய்களுக்கு போதிய அளவில் தண்ணீர் சென்றடைவதில்லை. மேலும் பாலப்பகுதியில் முட்செடிகள் அடர்ந்து வளர்ந்துள்ளதுடன், தூண்களில் பெரிய மரங்களும் வளர்ந்துள்ளதால் இதன் உறுதித்தன்மை பாதிக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து இப்பகுதி விவசாயிகள், நீர் வளத்துறையினரிடம் பலமுறை புகாரளித்தும் பலனில்லாததால் வேதனையில் உள்ளனர்.

இது குறித்து கால்வாய் பாசனக் கமிட்டி கோட்டத்தலைவர் எம். பி.ராமன் கூறியதாவது: இந்த தொட்டிப்பாலம் 1982 ஆம் ஆண்டு அப்போதைய உசிலம்பட்டி எம்எல்ஏ ஆண்டித்தேவரின் முயற்சியால் கிடைத்தது. கடைக்கோடி பகுதிக்கும் உரிய நீர் விரைவில் செல்வதற்காக, வழக்கமான தரைப்பகுதி கால்வாயாக அமைக்காமல். சுமார் ஒரு கிமீ தூரம் தொட்டிப் பாலத்துடன் கூடிய கால்வாய் அமைத்தனர். தமிழக அளவில் ஒரு சில இடங்களில் மட்டுமே இது போல் தொட்டிப் பாலம் விவசாய தேவைகளுக்காக உருவாக்கப்பட்டு உள்ளது.

இத்தகைய சிறப்பான பாலம் பராமரிப்பில்லாமல் நீர் வீணாக வெளியேறுவதால் கடைக்கோடி விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே தொட்டிப்பாலம் முதல் கால்வாய் முடிவு வரை, 27 கிமீ தூரத்திற்கு ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் சீரமைப்பு பணிகள் நடந்தது. அப்போதும் இந்த தொட்டிப் பாலத்தை தரமாக பராமரிக்காமல் விட்டுள்ளனர். இதனால் தற்போது பாசனத்திற்கு திறக்கப்பட்ட தண்ணீர் அதிக அளவு வீணாகிறது. மேலும் பாலத்தின் மேல் பெரிய மரங்கள் வளர்ந்துள்ளது. இது போன்ற காரணங்களால் நீர் சேதாரத்துடன் பாலத்தின் உறுதித் தன்மையும் பாதிக்கப்பட்டு வருகிறது. இந்த பாலத்தினை தரமான முறையில் சீரமைக்குமாறு, நீர் வளத்துறையினரிடம், பலமுறை கோரிக்கை மனுக்கள் அளித்தும் பலனில்லை. எனவே இப்பிரச்னையில் மாவட்ட நிர்வாகம் கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கூறினார்.

மேம்பாலத்தில் செடிகள்...

ராமேஸ்வரத்திலிருந்து கொச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் மதுரை - தேனி மார்க்கத்தில் முடக்குச்சாலை சந்திப்பு முதல் எச்எம்எஸ் காலனி சந்திப்பு வரை ஒன்றிய அரசின் சாலை மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.53.95 கோடியில் மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது. அதன்பிறகு பராமரிப்பு பணிகள் நடக்காததால், மேம்பாலத்தின் தூண்களை இணைக்கும் இரும்பு தகடுகள் சில இடங்களில் சேதமடைந்துள்ளன. மேலும் ஒரு சில இடங்களில் செடிகள் வளர்ந்துள்ளன. இதனால் பாலம் உறுதிதன்மையை இழக்கும் என்பதால், அதிகாரிகள் மேம்பாலத்தில் சேதமடைந்துள்ள இரும்பு தகடுகளை சீரமைப்பதுடன், செடிகளை அகற்ற வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது.

மதுரை அரிசி ஆலையில்

பாய்லருக்குள் மயங்கி விழுந்த பீகார் மாநில ஊழியர்கள் மீட்பு

தீயணைப்பு வீரர்கள் நடவடிக்கை

மதுரை, நவ. 24: மதுரையில் உள்ள அரிசி ஆலையில் பாய்லர் பராமரிப்பு பணியின்போது மயங்கி விழுந்த பீகார் மாநில தொழிலாளர்களுக்கு, தீயணைப்பு வீரர்கள் காப்பாற்றிய சம்பவம் பாராட்டை பெற்றுள்ளது.

மதுரை, மகாளிப்பட்டி நல்லமுத்துபிள்ளை தெரு பகுதியில் தனியார் ரைஸ் மில் செயல்பட்டு வருகிறது. இங்கு ஏராளமான வட மாநிலதொழிலாளர்கள் பணியில் உள்ளனர். இந்த ஆலையில் உள்ள பாய்லரில் பெயிண்ட் பூச்சு மற்றும் பராமரிப்பு பணிகள் நேற்று நடைபெற்றது இதில் ஏராளமானோர் ஈடுபட்டிருந்தனர். அப்போது பீகார் மாநிலத்தை சேர்ந்த பவுன்குமார் (24), விஷால்(24), ராஜினிஸ்(22), அஸ்தோஸ்(25) ஆகியோர் பாய்லருக்குள் அலுமினிய பெயிண்ட் அடிக்கும் வேலையில் இருந்தனர். உரிய பாதுகாப்பு கவசங்கள் இன்றி பணிகளை மேற்கொண்டதால், திடீரென மூச்சுத்திறனறல் ஏற்பட்டு 4 பேரும் பாயிலருக்குள் மயங்கி விழுந்துள்ளனர்.

இதனால் பதற்றம் அடைந்த அங்கிருந்தோர் தீயணைப்பு துறையினருக்கு தகவல் அளித்தனர். விரைந்து வந்த தீயணைப்புத்துறையினர் 4 பேரையும் மீட்டு, அவசரகால முதலுதவி சிகிச்சை அளித்து காப்பாற்றினர். பின்னர் அவர்களை அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். மதுரையில் அரிசி ஆலையில் நடந்த இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த விபத்து தொடர்பாக கீரைத்துறை காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். நால்வரின் உயிரை காப்பாற்றிய தீயணைப்பு வீரர்களை, தொழிலாளர்கள் பாராட்டினர்.

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 6வது தளம், B கட்டடம், கங்கா ட்ரூனோ, லோஹெகோன், புனே, மகாராஷ்டிரா 411014. கிளை அலுவலகம் அலகு: எண் 1510, 2ஆவது தளம், ஸ்ரீ காம்பிளக்ஸ், திருச்சி சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு-641018.

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர் / உ.ப–கடன்தாரர் / அ.மானதாரர்(கள்) / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் (இதற்குப்பிறகு "கடனீட்டு கடனீந்தோர்" என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், பிரிவு 13(12)–ன் படியும், கடனீட்டு சொத்துகளின் உரிமை (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 & 9–ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கவாதீனம் செய்துள்ளார்.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 26.12.2025 அன்று மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன்மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்–ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள இணைப்பில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்துகொள்ள GHFL's/ கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com–ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	வருவிற்கு விண்ணப்பங்கள் / நிதிகளை வழங்கக் கடைசித் தேதி (K)
4.	Loan No. HL00126100000005004077 அழகுசூர்யா செல்வராஜ் (கடன்தாரர்), செல்வராஜ் ராமச்சந்திரன் (உப கடன்தாரர்), முத்துலட்சுமி செல்வராஜ் (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 09.07.2025 மொத்த நிலுவை: 09.07.2025 தேதிப்படி செலுத்த வேண்டிய தொகை ரூ.2029307/– (ரூபாய் இருபது லட்சத்து இருபத்தொன்பதாயிரத்து முந்நூற்று ஏழு மட்டும்) மற்றும் பணம் செலுத்தும் வரையிலான ஆண்டு வட்டி @14.1% உட்பட.	கையக	மதுரை மாவட்டம், மதுரை தெற்குப் பதிவு மாவட்டம், மதுரை IVஆம் இணை சார்பதிவு அலுவலக வட்டாரம், மதுரை வடக்கு தாலுகா, பொதும்பு கிராமம், பொதும்பு 24 தூண்டு கிராமத்தைச் சேர்ந்த மறுசர்வே எண் 314/1, UDR சர்வே எண் 11/1, பரப்பளவு 0.11.5 ஹெக்டேர் அதாவது 28 % சதுர அடி, மறுசர்வே எண் 314/5, UDR சர்வே எண் 11/5, பரப்பளவு 0.22.5 ஹெக்டேர் அதாவது 56 சென்ட், மறுசர்வே எண் 314/3, UDR சர்வே எண் 11/3, பரப்பளவு 0.18.5 ஹெக்டேர் அதாவது 46 சென்ட், மறுசர்வே எண் 318/1a, UDR சர்வே எண் 12/1a, பரப்பளவு 0.18.5 ஹெக்டேர் அதாவது 46 சென்ட், மறுசர்வே எண் 318/2a, சர்வே எண் 12/2a, பரப்பளவு 0.07.5 ஹெக்டேர் அதாவது 18% சென்ட், மொத்தப் பரப்பளவு 1 ஏக்கர் 95 சென்ட் கொண்ட சொத்து, "ஈகிள் நகர்" என்ற பெயரில் பல்வேறு மனைகளாகப் பிரிக்கப்பட்டது, மறுசர்வே எண் 11/5, இதிலடங்கிய மனை எண் 47, சொத்தின் பரப்பளவு 840 சதுர அடி. **எல்லைகள் பின்வருமாறு: வடக்கு:** மனை எண் 37, **கிழக்கு:** மனை எண் 46, **தெற்கு:** 20 அடி அகலமுள்ள சாலை, **மேற்கு:** மனை எண் 48. இவற்றுக்கிடையே உள்ள சொத்தின் அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கில் மற்றும் தெற்கில் – 24 அடி, வடக்குத் தெற்காக கிழக்கில் மற்றும் மேற்கில் 35 அடி. மொத்தப் பரப்பளவு 840 சதுர அடிக் கொண்ட காலி மனை மற்றும் அனைத்து முன்வைப்புத் தொகைகள் மற்றும் பொருத்தல்களுடன் அனைத்து இதர வசதிகள் உட்பட. இந்தச் சொத்தின் அனைத்து வழிப்பாதை உரிமைகள் சேர்த்து. மேற்படி சொத்தின் உட்பிரிவு மறுசர்வே எண்.11/5a1a1. தற்போதைய உட்பிரிவு சர்வே எண் 11/21, பரப்பளவு 0.00.78 ஹெக்டேர், பட்டா எண் 3147. இது பொதும்பு ஊராட்சி எல்லைக்கு உட்பட்டது.	ரூ.1808100/– (ரூபாய் பதினெட்டு லட்சத்து எட்டாயிரத்து நூறு மட்டும்)	ரூ.180810/– (ரூபாய் ஒரு லட்சத்து எண்பதாயிரத்து எண்ணூற்று பத்து மட்டும்)	24.12.2025 மாலை 5 மணிக்கு முன்பு	10,000/-	19-12-2025 (11AM – 4PM)	26-12-2025 (11 AM- 2PM)	ஏதுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/ கொள்முதலாளர்கள் ஏலப்பள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச் சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்துகொள்ள அருகில் உள்ள கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்துவரி, மின்சாரம் வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்ட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் பயனாளர் அடையாள முகவரி, கடவுச்சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிட், முகவரி: மனை எண்–68, 3ஆவது தளம், குர்கான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@ctindia.com, தொடர்பு எண். 9948182222 மூலமாகவோ தொடர்பிலிருந்து அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை கயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக "க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்" வங்கிக் கணக்கில், ICICI BANK LTD, கணக்கு எண் – 091551000028 மற்றும் IFSC எண் – ICIC0000915, ICICI வங்கி லிட், பஞ்சலில் டெக் பார்க், கணபதி செனக் அருகில், 43/44 விமன் நகர் 411014 என்ற கிளையில் செலுத்தத்தக்க விதமாக ஏதேனும் தேசிய வங்கியினை அல்லது அட்டவணை வங்கியினை 24.12.2025 தேதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவே செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் பெயரை முன்னதாகவே பதிவுசெய்து கட்டணங்களை மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச்சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை கயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூலப் பிரதியை என் 1510, 2ஆவது தளம், ஸ்ரீ காம்பிளக்ஸ், திருச்சி சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு–641018 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலும் கையேபி எண். +91 9567626050 மின்னஞ்சல் முகவரி rahul.r1@grihumhousing.com–ல் தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்துகொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com–ஐ பார்வையிடவும். கடனீட்டு சொ